# பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

## அஹமதி தமிழ் திருச்சபை

" உம்முடைய வசனம்
என் கால்களுக்குத்
தீபமும், என் பாதைக்கு
வெளிச்சமுமாயிருக்கிறது".

சங்கீதம் 119:105

செய்தி மலர்
2023
ஆகஸ்ட்

இதழ் : 04
மலர் : 20

by joki 2004



# சபை ஊழியரின் அன்பு மடல்



## "உடன்படிக்கை"

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துக்களையும் ஆசீர்வாதங்களையும் கூறிக்கொள்ளுகிறேன்.

கடந்த ஜுலை மாதம் முழுவதும் நம்மை கரம்பிடித்து நடத்தின கர்த்தர் வரும் ஆகஸ்டு மாதத்திலும் அதிசயமாய் வழி நடத்துவாராக.

நம்முடைய தேவாதி தேவன் மகத்துவும் பயங்கரமுமான கடவுளாக இருந்தாலும் அவர் படைத்த மனுக்குலமாகிய நம்மோடு வாசம் செய்வதையும், உறவாடுவதையும், பேசுவதையும், நித்திய நித்திய காலமாய் தம்மோடு நம்மையும் சிங்காசனத்தில் சரிசமமாய் அமர வைப்பதிலும் அதிக ஆவலுள்ளவராய் இருக்கிறார். அதை அவர் நம்மோடு செய்ய விரும்பும் உடன்படிக்கைகள் மூலம் வெளிப்படுத்துகிறார். என்னென்ன உடன்படிக்கைகளை கர்த்தர் நம்மோடு செய்தார் என்பதை கீழ்வரும் பகுதிகளில் காணலாம்.

"மலைகள் விலகினாலும் பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும் என் கிருபை உன்னை விட்டு விலகாமலும் என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும் என்று உன் மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார்" (ஏசாயா–54:10)

### 1.நம் சந்ததியினரை ஆசீர்வதிக்கும் உடன்படிக்கை

"உன் மேல் இருக்கிற என் ஆவியும் நான் உன் வாயில் அருளிய என் வார்த்தைகளும் இது முதல் என்றென்றைக்கும் உன் வாயிலிருந்தும் உன் சந்ததியின் வாயிலிருந்தும் உன்சந்ததியினுடைய சந்ததியின் வாயிலிருந்தும் நீங்குவதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார். இது எனக்கு அவர்களோடிருக்கும் என் உடன்படிக்கை என்று கர்த்தர் சொல்லுகிறார்" (ஏசாயா–59:21)

பிரியமானவர்களே, சந்ததி சந்தியாய் ஆசீர்வதிக்க விரும்பும் தேவன் நம்முடைய சந்ததியையும் ஜீவ வசனங்களையும் பரிசுத்த ஆவியையும் அளித்து இந்த மாதத்திலே ஆசீர்வதிப்பார்.

"ஒரு சந்ததி அவரை சேவிக்கும் தலைமுறை தலைமுறையாக அது ஆண்டவருடைய சந்ததி என்னப்படும். அவர்கள் வந்து அவரே இவைகளை செய்தார் என்று பிறக்கப்போகிற ஜனங்களுக்கு அவருடைய நீதியை அறிவிப்பார்கள்" சங்கீ-22:30,31)

இப்படி தலைமுறை தலைமுறையாய் வாழையடி வாழையாய் நம்முடைய வம்சம் ஆசீர்வதிக்கப்படும். பரிசுத்த ஆவியானவர் இதற்கு துனை செய்வார். வேத வசனங்கள் நம் பிள்ளைகளுக்கு போதித்து இந்த உலகத்தின் கரை திறைகளுக்கு விலக்கி பாதுகாக்கும். வேதம் சொல்லுகிறது "கர்த்தருக்கு பயப்படுகிறவனுக்கு திட நம்பிக்கை உண்டு அவனுடைய பிள்ளைகளுக்கு அடைக்கலம் கிடைக்கும்" என்று. (நீதி-14:26)

உங்கள் பிள்ளைகள் எல்லாரும கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள், உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரியதாயிருக்கும். (ஏசாயா-54:13)

அவர்களோடே நித்திய உடன்படிக்கை பண்ணுவேன். அவர்கள் சந்ததியானது ஜாதிகளின் நடுவிலும் அவர்கள் சந்தானமானது ஜனங்களின் நடுவிலும் அறியப்பட்டிருக்கும். அவர்களை பார்க்கிற யாவரும் அவர்கள் கர்த்தரால் ஆசீர்வாதம் பெற்ற சந்ததி என்று அறிந்து கொள்வார்கள்" (ஏசாயா-61:8,9)

## 2.நமக்கு கிருபையையும் சமாதானத்தையும் கொடுக்கும் உடன்படிக்கை

"மலைகள் விலகினாலும் பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும் என் கிருபை உன்னை விட்டு விலகாமலும் என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும் என்று உன் மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார்" (ஏசாயா-54:10)

இந்த உலகத்தில் எத்தனையோ உபத்திரவங்கள் பாடுகள் நம்மை சூழ்ந்தாலும் அவைகளெல்லாம் கடந்து ஜெயம் பெறுவதற்கு கர்த்தர் நமக்கு துணையாய் நிற்கிறார். இயேசு சொன்னார் "என்னிடத்தில் உங்களுக்கு சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்கு சொன்னேன் உலகத்தில் உங்களுக்கு உபத்திரம் உண்டு

ஆனாலும் திடன் கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்" (யோவா-16:33)

ஆகவே நம் வாழ்க்கையில் அனுபவிக்கும் உபத்திரவங்களை பார்த்து நீங்கள் சோர்ந்து போகக்கூடாது. மலைகளே விலகி போனாலும் மாறாத இயேசுவின் அன்பு நம்மை பாதுகாக்கும். நம்முடைய உள்ளத்தை தெய்வீக சமாதானத்தினால் நிரப்பும்.

"சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன் என்னுடைய சமாதானத்தையே உங்களுக்கு கொடுக்கிறேன். உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்கு கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக" (யோவா-14:27)

ஏனெனில் அவர் வாக்கு பண்ணியிருக்கிறார் " நீ தண்ணீர்களை கடக்கும் போது நான் உன்னோடு இருப்பேன் நீ ஆறுகளை கடக்கும் போது அவைகள் உன் மேல் புரளுவதில்லை நீ அக்கினியில் நடக்கும் போது வேகாதிருப்பாய் அக்கினி ஜுவாலை உன் பேரில் பற்றாது" (ஏசா-43:2)

## 3. தம்முடைய நியாயப்பிரமாணத்தை உள்ளத்தில் எழுதும் உடன்படிக்கை

"அந்நாட்களுக்கு பிற்பாடு நான் இஸ்ரவேல் குடும்பத்தோடே பண்ணப்போகிற உடன்படிக்கையாவது நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து அதை அவர்கள் இருதயத்திலே எழுதி நான் அவர்கள் தேவனாயிருப்பேன். அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இனி ஒருவன் தன் அயலானையும் ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி கர்த்தரை அறிந்து கொள் என்று போதிப்பதில்லை. அவர்களில் சிறியவன் முதல் பெரியவன் மட்டும் எல்லாரும் என்னை அறிந்து கொள்ளுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்" (ஏசாயா-31:33,34)

ஆம் பிரியமானவர்களே, நம்முடைய பரமபிதா நம்மை மகனாக மகளாக ஏற்றுக்கொண்டிருக்கிறார். அவருடைய அன்பு நம் உள்ளத்தில் எழுதப்பட்டிருக்கிறது. நம்முடைய பாவங்கள் அக்கிரமங்களுக்காக அவர் சிந்தின இரத்தம் நம்மை கழுவி சுத்திகரித்திருக்கிறது.

நம்முடைய பாவங்களை மன்னித்த அந்த மகா பெரிய தயவையும் அன்பையும் நினைத்து நினைத்து நம் வாழ்நாள் முழுவதும் நாம் நன்றி நிறைந்த உள்ளத்தோடு வாழ்வதின் மூலம் மோசேயின்

நியாயப்பிரமாணத்தை அறியாமலேயே அதை நிறைவேற்றுபவர்களாய் நாம் மாறி விடுகிறோம். பரிசுத்த ஆவியானவர் இதற்கு துணை புரிகிறார்.

வேதம் கூறுகிறது "நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது. ஒருவரும் உங்களுக்கு போதிக்க வேண்டுவதில்லை. அந்த அபிஷேகம் சகலத்தையும் குறித்து உங்களுக்கு போதிக்கிறது. அது சத்தியமாயிருக்கிறது. பொய்யல்ல அது உங்களுக்கு போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாள. (1-யோவா-2:27)

அன்பு சகோதர சகோதரிகளே சாதாரண மனிதர்களாகிய நம்மோடு எல்லா வல்ல பரம பிதா செய்திருக்கிற மேற்சொல்லியிருக்கிற உடன்படிக்கைகள் யாவையும் நன்றியோடு நினைவு கூர்ந்து வரும் ஆகஸ்டு மாதம் முழுவதும் ஜெயத்தோடு வாழ கர்த்தர் கிருபை செய்வாராக.

கர்த்தர் தாமே நம் ஒவ்வொருவரையும் வரும் ஆகஸ்டு மாதம் முழுவதும் கரம் பிடித்து நடத்தி ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவின் பணியில்,
உங்கள் அன்பு சகோதரன்,
S.ஸ்டாலின்

## தேவ செய்தி

### ஆவிக்குரிய வாழ்வின் முன்னேற்றம்

அன்பான சகோர சகோதரிகளே, நம்முடைய ஆவிக்குரிய வாழ்வில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய வழிகளை இங்கு பார்க்கலாம்.

" தேவனே சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்தில் புதுப்பியும்" சங்கீ-51:10

மேற்சொன்ன வசனத்தில் சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்தில் புதுப்பியும் என்று தேவனிடத்தில் தாவீது கெஞ்சுவதை பார்க்கலாம்.

அதுமட்டுமல்ல சங்கீ-51:11-ல் உமது சமூகத்தை விட்டு என்னை தள்ளாமலும் உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலும் இரும் என்று தாவீது சொல்கிறார். எது

போனாலும் பரவாயில்லை ஆனால் தேவனுடைய ஆவி மட்டும் இருந்தால் போதும் தேவனிடத்தில் கேட்பதை வாசிக்கிறோம்.–

1–கொரி–2:15 ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான் ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான்.

அப்படியென்றால் நாம் நம்முடைய பரிசுத்த ஆவியில் ஒரு முன்னேற்றம் வேண்டும்.

II இராஜாக்கள் – 2 –ம் அதிகாரம் 1 முதல் 14 வரை உள்ள வசனங்களிள் இருந்து எலிசாவின் வாழ்விலிருந்து ஆவிக்குரிய நிறைவை பெற எலிசா கடந்து வந்த காரியங்களை பார்போம். முதலாவது எலிசா கில்கால் வரை செல்கிறான்.

## 1. கில்கால்... என்றால்......... நிந்தையைப் புரட்டி போடுதல் என்று அர்த்தம்.

யோசு–5:9–ல் இன்று எகிப்தின் நிந்தையை உங்கள் மேல் இராதபடிக்கு புரட்டிப் போட்டேன் என்றார். அதனால் அந்த ஸ்தலம் இந்நாள் வரைக்கும் கில்கால் எனப்படுகிறது.

கர்த்தரும் நம் நிந்தைகளை புரட்டி போட்டு நம்மை அவரது பிள்ளையாக மாற்றினாரே, நமக்காக அவர் இரத்தம் சிந்தினாரே.

யோசு–5:10 கில்காலிலே பாளயமிறங்கி எரிகோவின் சமனான வெளியிலே பஸ்காவை ஆசரித்தார்கள் என்று பார்க்கிறோம். பஸ்கா என்பதற்கு பாடுகள் என்று அர்த்தம்.

லூக்–22 அதிகாரத்தில் இயேசு கிறிஸ்து சிலுவையில் பாடுகளுக்கு செல்லு முன் பஸ்காவை ஆசரித்தார் என்று வாசிக்கிறோம்.

அப்படியென்றால் தேவன் நம் நிந்தையை நீக்கியவுடன் அதோடு நின்றுவிட கூடாது அவருக்காக பாடுகள் பட ஆயத்தமாயிருக்க வேண்டும். இரண்டாவதாக பெத்தேல் செல்கிறான்.

## 2. பெத்தேல்... என்றால் ... தேவனுடைய வீடு, ஆசீர்வாதத்தின் வீடு என்று அர்த்தம்

ஆதி–28:18–19– ல் அதிகாலையிலே யாக்கோபு எழுந்து தன் தலையின் கீழ் வைத்திருந்த கல்லை எடுத்து அதைத் தூனாக நிறத்தி

அதின் மேல் எண்ணெய் வார்த்து. அந்த ஸ்தலத்திற்கு பெத்தேல் என்று பேரிட்டான். மேலும்

(ஆதி–28:22) நான் தூணாக நிறுத்தின இந்தக் கல் தேவனுக்கு வீடாகும், தேவரீர் எனக்கு தரும் எல்லாவற்றிலும் உமக்கு தசம பாகம் செலுத்துவேன் என்று சொல்லி பொருத்தனை செய்தான். நாமும் அது போல தேவனுடைய வீட்டிற்கு வந்தவுடன் ஆசீர்வாதத்தை பெற்றவுடன் பொருத்தனை செய்து நிறைவேற்றுபவர்களாக இருக்க வேண்டும். ஏனென்றால்

(ஆதி–31:13)–ல் கர்த்தர் சொல்கிறார், எனக்கு ஒரு பொருத்தனையைப் பண்ணின பெத்தேலிலே உனக்கு தரிசனமான தேவன் நானே என்று. நாம் செய்த பொருத்தனையை தேவன் நினைவில் வைத்திருக்கிறார்.

தாவீது சொல்கிறார் சங்கீ–66:14 என் இக்கட்டில் நான் என் உதடுகளை திறந்து என் வாயினால் சொல்லிய என் பொருத்தனைகளை உமக்கு செலுத்துவேன். இக்கட்டிலே பொருத்தனைகளை செலுத்துகிறார் தாவீது. மூன்றாவதாக

## 3. எரிகோ ... என்றால் ... அடைக்கப்பட்ட தேசம் என்று அர்த்தம்.

யோசு–6:1– எரிகோ இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக அடைக்கப்படிருந்தது. ஒருவரும் வெளியே போகவுமில்லை, ஒருவரும் உள்ளே வரவுமில்லை.

இஸ்ரவேல் ஜனங்கள் ஆசீர்வதிக்கப்பட்ட தேசத்தை சுதந்தரிக்க எரிகோ கோட்டை தடையாக ஆசீர்வாதத்தை அடைத்து வைக்க இருந்தது. இஸ்ரவேல் ஜனங்கள் ஆறு நாள் 1 முறையும் ஏழாவது நாள் 7 முறையும் கர்த்தரின் சொற்படி சுற்றி வந்த போது கர்த்தர் அந்த எரிகோ கோட்டையை உடைத்து வழியை ஏற்படுத்தி கொடுத்தார்.

அதற்கு பிற்பாடு அவர்கள் ஜனங்களோடு போராடி யுத்தம் செய்து கானான் தேசத்தை சுதந்தரித்தார்கள். யோசுவா ஆயி, ஏத்தியர், எமொரியர்.எபூசியர், பெரிசியர், ஏவியர் இப்படியாக 31 ராஜாக்களை முறியடித்தான் என்று வாசிக்கிறோம்.

அப்படியென்றால் தேவன் நம் வாழ்க்கையில் காணப்பட்ட தடைகளை நீக்கியதும் நாம் அப்படியே நின்றுவிட கூடாது. தேவப்பிள்ளைகளுக்காக முழங்காலில் நின்று யுத்தம் செய்பவர்களாக இருக்க வேண்டும்.

## 4. யோர்தான்... என்றால்... கரை புரண்டு போதல் என்று அர்த்தம்.

யோசு–3:15–17 – யோர்தான் அறுப்புக்காலம் முழுவதும் கரை புரண்டு போம். பெட்டியை சுமக்கிற ஆசாரியர்களின் கால்கள் தண்ணீரின் ஓரத்தில் பட்டவுடன் யோர்தான் தண்ணீர் குவியலாக நின்றது.

மேலும் தொடர்ந்து வாசிக்கிறோம் சகல ஜனங்களும் கடந்து தீருமளவும் ஆசாரியர்கள் யோர்தானின் நடுவில் காலூன்றி நின்றார்கள்.

கர்த்தர் நம் பாடுகள் நிந்தைகள் வேதனை எல்லாவற்றையும் நீக்கியதும். நாம் பழைய காரியங்களை நினைத்தவர்களாக சாட்சி உள்ள வாழ்கை வாழ வேண்டும்

கில்காலின் அடையாளம் – பாடுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பெத்தேலின் அடையானம்- பொருத்தனை செய்பவர்களாக இருக்க வேண்டும்.

எரிகோவின் அடையாளம் – போராடி ஜெயிக்கிறவர்களாக இருக்க வேண்டும்.

யோர்தானின் அடையாளம் - நாம் சாட்சியுள்ள வாழ்வு வாழ்பவர்களாக இருக்க வேண்டும்.

கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக ... ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்,
உங்கள் அன்பு சகோதரன்,
ஆண்டனி

## வாலிபர் பகுதி

" தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும் " (1–யோவா–5:4)

### 1. ஜெயம் தரும் கர்த்தர் யார் ஜெயம் பெற முடியும்.....

அன்பான சகோதர சகோதரிகளே வேதத்தில் சொல்லப்பட்டது போலவே நாம் தேவனால் பிறந்தவர்களாக இருந்தால் மட்டுமே ஜெயமான வாழ்க்கை வாழ்ந்து பரலோகம் செல்ல முடியும் எப்படி தேவனால் பிறப்பது

என்பதை யோவான்–3:5,7 –ல் இயேசு பிரதியுத்தரமாக ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்ஜியத்திலே பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று நான் உனக்குச் சொனனதைக்குறித்து அதிசயப்பட வேண்டாம்.இந்த வசனம் நமக்கு தெளிவாக கூறுகிறது வாலிப பிள்ளைகளே எனவே ஞானஸ்நானம் பெற வேண்டும்.

## 2.எப்படி ஜெயம் பெற முடியும்

விசுவாசத்தின் மூலம் நாம் ஜெயம் பெறமுடியும். 1–யோவா–5:4 நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். ஒரு நல்ல விசுவாசமான மனிதர் தேவனுக்காக வாழ்ந்து கொண்டிருந்தார் திடீரென அவருக்கு சரீரம் பெலவீனம் அடைந்தார் அவருடைய குடும்பத்தார் அவரை அந்த ஊரில் உள்ள மிகப்பெரிய மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். (அவருக்கு இரண்டு பிள்ளைகள் ஒரு பெண் ஒரு ஆண்) குடும்பத்தார் அங்கலாய்த்து கொண்டிருந்தனர். டாக்டர் என்ன சொல்லுவார் என்று சற்று நேரத்தில் வந்து உங்கள் கணவருக்கு எய்ட்ஸ் இருக்கிறது அவர் இன்னும் மூன்று மாதத்தில் இறந்து விடுவார் என்று கூறின மறு வினாடி குடும்பத்தார் இருதயம் உடைந்து போனது. மனைவி வரை தகாத வார்த்தையால் திட்டினாள். பிள்ளைகள் இவர் ஒரு தகப்பனா என்று வெறுத்து தள்ளினார்கள். தாய் தந்தை இவன் எனது பிள்ளை இல்லை என தூக்கி எறிந்தார்கள் இரண்டு மாதம்மருத்துவ மனையில் இருந்தார். அவருடைய கம்பெனி பணம் கொடுக்கவில்லை குடும்பத்தார் கைவிட்டனர். டாக்டர் ஐயா நீங்கள் இன்னும் ஒரு வாரம்தான் உயிர் வாழ முடியும் எனவே நாளை வெளியே போய்விடுங்கள் என கூறி விட்டனர்.

மனம் உடைந்த அந்த நபர் இயேசுவை நோக்கி நான் எப்படி வாழ்ந்தேன் என்பது உமக்கு தெரியும் நான் உம்மை விசுவாசிக்கிறேன் என்னை சுகம் படுத்தும் என்று அழுதுகொண்டே தூங்கி விட்டார். திடீரென கண் விழித்த அவர் முன்பு அவரது குடும்பம் அவரது கம்பெனி கூடி நின்றார்கள். டாக்டர் அங்கும் இங்கும் ஓடி கொண்டு இருக்க இவருக்கு அவ்வளவு தான் போல என்று நினைக்கும் போதே அனைவரும் அவரிடத்தில் அழுது கொண்டே மன்னிப்பு கேட்டனர். அவர் ஆச்சரியப்பட மருத்துவர் நீங்கள் பூரண சுகமடைந்து விட்டதாக கூறினார்.

பார்த்தீங்களா அவருடைய விசுவாசம் முடிந்த வாழ்வையே ஜெயமாக மாற்றியது. 1–கொரி–15:54–ல் மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்ற வார்த்தை நிறைவேறும். எனவே அன்பு சகோதர சகோதரிகளே இயேசு

(தொடர்ச்சி 14–ஆம் பக்கத்தில் . . .)

..உன் சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவேன்.

... (ஆதி – 16:10)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

சகோ. ஜெபதுரை ஜோசப்
சகோ. பிராங்ளின் கலை செல்வன்
சகோதரி. மெர்ஸ்லின் ஏசுரெத்தினம்
செல்வி. காயத்ரி கொம்மையன்
சகோதரி. போத்தியம்மாள் கண்ணன்
செல்வன். எரிக் நாதன் ஆன்டனி
செல்வி. வனிஷா
சகோ. கிறிஸ்டோபர் தேவராஜ்
சகோ. வில்சன் செல்லையா
சகோதரி. எமிமாள் சாமுவேல்
சகோ. ஆரோக்கிய தாஸ்
சகோ. ராஜா குமார்
சகோதரி. ஸ்நேகா லதா கிறிஸ்டோபர்
செல்வி. புஷ்பா ராஜன்

சகோ. சதீஷ்குமார்
சகோதரி. ஜெனிஷா
சகோ. வேளாங்கண்ணி
சகோ. அருண் இம்மானுவேல்
செல்வன். ஆரோன் விஜயன்
செல்வி. சிஃபன்சிஹா சாம்ஆனந்த்
சகோதரி. சௌமியா சுனில் வின்ஸ்
சகோதரி. ஆஸ்லின் ரோனியா சுபின் சிங்
சகோதரி. டெய்சி ஶ்ரீனா ஆன்டனி
சகோதரி. சங்கீதராஜ்
செல்வி. லாரா கேசன்ட்ரா சதிஷ்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்
(ஆதி .22:18)

திருமதி /திரு. எபிநேசர் .V
திருமதி /திரு. ஜெயக்குமார் ஞானதாஸ்
திருமதி / திரு. ஸ்டீபன் ஜெயக்குமார்
திருமதி /திரு.டேனியல் ராஜ்
திருமதி / திரு. இம்மானுவேல் ஸ்டீபன்
திருமதி / திரு. பால்ராஜ் ஆமோஸ்

திருமதி / திரு. சிவகுமார்
திருமதி / திரு. ஆரோக்கியராஜ்
திருமதி / திரு. சாலமோன் முருகன்
திருமதி /திரு. வர்கீஸ் ஜெஸ்லட்
திருமதி /திரு. கமலதாசன்
திருமதி /திரு. ஜாண் பாஸ்கோ

# 2023 ஆகஸ்ட் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:30 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 06/08/2023 | சகோ.சுகுமார் | சகோ.ஸ்டாலின் |
| 13/08/2023 | சகோ.பிராங்கிலின் | சகோ.பக்தராஜ் |
| 20/08/2023 | சகோ.டேவிட் ஜெயகுமார் | சகோ.ஆரோக்கிய தாஸ் |
| 27/08/2023 | சகோ.சாம் ஆனந்த் | சகோ.அருண் இம்மானுவேல் |

## வெள்ளி ஆராதனை மாலை 4:00 முதல் 6:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 04/08/2023 | சகோ.ரவி ஜாண் பீட்டர் | சகோ.ஸ்டாலின் |
| 11/08/2023 | சகோ.தாமஸ் | சகோ.கிறிஸ்டோபர் தேவராஜ் |
| 18/08/2023 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 25/08/2023 | சகோ.M.கிறிஸ்டோபர் | சகோ.சாமுவேல் தாசய்யா |

**10/08/2023 அன்று முழு இரவு ஜெபம் ஆராதனை**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம்– இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணிவரை

**12/08/2023 அன்று சகோதரிகள் ஐக்கிய கூடுகை**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம் – மாலை 6:00 முதல் இரவு 8:30 மணிவரை

வேத வினா பகுதி – II கொரிந்தியர்

**25/08/2023 அன்று வாலிபர் ஐக்கிய கூடுகை**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம் – மாலை 6:00 முதல் இரவு 8:30 மணிவரை

வேத வினா பகுதி – I சாமுவேல் & II சாமுவேல்

# 2023 ஆகஸ்ட் மாதத்திற்கான வேத வினா!

**கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**



1.மனுஷரை பிடிக்க இயேசு யாரை அழைத்தார்?

2. யாருக்கு பயப்பட வேண்டும்?

3.கள்ளர் குகையாக்கப்பட்ட இடம் எது?

4.உலகத்திலும், பரலேகத்திலும் மன்னிக்கப்படாத குற்றம் எது?

5.ஓநாய் போல இருப்பவர்கள், ஆனால் ஆட்டுத் தோலை போர்த்தி இருப்பார்கள். யார் இவர்கள்?

6.பரிசேயர் இடறலடைந்த வசனம் எது?

7.சிரசின் மேல் ஊற்றப்பட்ட தைலம் எதற்க்கு அடையாளம்?

8.உயித்தெழுந்த இயேசுவை சீஷர்கள் கண்ட இடம் எது?

9.வலதுகை செய்வதை இடதுகை அறிய கூடாது. எதை?

10.ஜலத்தின் மேல் நடந்த இருவர் பெயர்?

11.நாசரேத் எந்த நாட்டில் உள்ளது?

12.குணமாக்கப் பட்ட இயேசுவின் பின்னே சென்றவர்கள் அநேகர் ஆனால் ஒருவரை குணமாக்க இயேசு பின்னே சென்றார். யார் அவர்?

13.நோவா காலத்தில் நடந்தது போல எப்பொழுது நடக்கும்?

14.எது ஒழிந்து போகது என்று இயேசு சொன்னார்?

15.எலியா வந்தாயிற்று, இயேசு சொன்ன எலியா யார்?

விடைகளை வருகின்ற 20-08-2023க்குள்
(WhatsApp #+91 8940523562) என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில் மத்தேயு அதிகாரம் முழுவதிலும் பதிலை கண்டுபிடிக்கவும்.

– – –தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; –மத்தேயு 7:7

## 2023 – ஜுலை மாத வேத வினாவுக்கு விடை

1.எருசலேம் (சகரியா 2:5)
2.மூன்றாம் பங்கு மனுஷர் (சகரியா 13:9)
3.எப்பிராயிமர் (சகரியா 10:12 )
4.சிநெயார் (சகரியா 5:11 )
5.நாலு, கொம்புகள் யூதாவையும் இஸ்ரவேலயும் எருசலேமையும் (சகரியா 1:18,19)
6.செருபாவேல் (சகரியா 4:9)
7.சீயோன் (சகரியா 8:2)
8.தாவீது குடும்பத்தார், எருசலேம் குடிகள் (சகரியா 12:10)
9.அனுக்கிரகம் , நிக்கிரகம் (சகரியா 11:7)
10.சருவ லோகத்துக்கும் ஆண்டவராய் இருக்கிறவரின் சமூகத்தில் நிற்கிற அபிஷேகம் பெற்றவர்கள் (சகரியா 4:14)
11.யோசுவா (சகரியா 3:2)
12.நாலு இரதங்கள் (சகரியா 6:1,5)
13.தள்ளிவிடுதல், பிறனுக்கு விரோதமாய் தன் இருதயத்தில் தீங்கு நினையாமலும், பொய்யாணையின் மேல் பிரியப்படுவது (சகரியா 8:17)
14.கர்த்தருக்கு பயந்தவர்களுக்காகவும் அவருடைய நாமத்தை தியனிக்கிறவர்களுக்காகவும் (மல்கியா 3:16)
15.லேவி (மல்கியா 2:5)

## 2023– ஜுலை மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis.சுகந்தி தம்பு குமார்
Sis.ஜெஸ்டெட் வர்கீஸ்
Sis.நித்யா ஜோன்ஸ்
Sis.அனிதா ஜெஸ்டின்
Sis.சாந்தி
Sis.சுபா ஸ்டீபன்
Bro.பால்ராஜ்

இன்று உங்களை பார்த்து கூறுவது ஜெயம் பெறுகிறவர்களாய் நீங்கள் மாற வேண்டும் என்று உங்களில் யாராகிலும் தோல்வியான வாழ்வில் வாழ்கின்ற நிலையில் இருந்தால் இயேசு ஜெயம் தர வல்லவராய் இருக்கிறார்.

## 3. எதனால் ஜெயம் கிடைக்கும்

ஜெயத்தால் ஜெயம் கிடைக்கும் 1–சாமு–1:15–ல் அன்னாள் என் ஆண்டவனே, நான் மனக்கிலேசமுள்ள ஸ்தீரீ நான் கர்த்தருடைய சந்நிதியில் என் இருதயத்தை ஊற்றிவிட்டேன். இப்படி இவர்கள் தேவனிடத்தில் ஜெபித்ததால் தேவன் ஜெபத்தைக் கேட்டு ஜெயத்தை கொடுத்தார். சாமு–1:20–ல் சில நாள் சென்ற பின்பு அன்னாள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று கர்த்தரிடத்தில் அவனைக் கேட்டேன் என்று சொல்லி, அவனுக்க சாமுவேல் என்று பேரிட்டாள். என்பதை இந்த வசனம் கூறுகிறது.

எனவே பிள்ளைகளே ஜெப வாழ்க்கையை விட்டு விடாமல் இடைவிடாமல் ஜெபிப்போம் ஜெயம் பெறுவோம். தாவீதின் ஜெப வாழ்க்கையே இன்று வரை நமக்கு அவரை நினைவு படுத்துகிறது. ஏனெனில் அவர் சிறியவனாய் இருக்கும் போதும் மிகப்பெரிய ராஜாவாக இருக்கும் போதும் தன் பெலத்தை நம்பாமல் தன் படையை நம்பாமல் தன் அறிவை நம்பாமல் கர்த்தரையே விசுவாசித்து ஜெபம் செய்கிறார். எனவே தான் 2–சாமு–5:19–ல் பெலிஸ்தருக்கு விரோதப் போகலாமா, அவர்களை என் கையிலே ஒப்புக்கொடுப்பீரா என்று தாவீது கர்த்தரிடத்தில் விசாரித்த போது கர்த்தர் போ பெலிஸ்தரை உன் கையில் நிச்சயமாய் ஒப்புக்கொடுப்பேன் என்று தாவீதுக்குச் சொன்னார். இந்த வசனத்தின் படி அவர் ஜெயம் எடுக்கிறார்.

நாமும் நமது வாழ்க்கையில் இவரை போன்று கர்த்தரை முன்பாக வைத்து முழு விசுவாசத்தோடு ஜெபம் செய்யும்போது அவர் நமக்கு நமது பண கஷ்டம், வியாதிகள், சாபம், தரித்திரம், இழப்பு, நஷ்டம் இது போன்ற காரியங்களில் நமக்கும் தாவீது ராஜாவுக்கும் ஜெயம் அளித்தது போல நமக்கும் இவைகளில் இருந்து ஜெயம் தர இயேசு கிறிஸ்து வல்லவராக இருக்கிறார். ஜெபம் இல்லாத விடு என பழமொழி உண்டு அங்கே பாதுகாப்பு இருக்காது. அது போலவே ஜெபம் இல்லா வீடும் பாதுகாப்பு இல்லாதுதான் எனவே பிள்ளைகளே நாம் எல்லோரும் கர்த்தரை விசவாசிப்போம், இயேசுவில் பிறப்போம், தேவனிடத்தில் ஜெபிப்போம், மாம்ச உலகத்தை ஜெயிப்போம்.

வாலிபம் இயேசுவுக்கே.

# குணசாலியான ஸ்தீரீ

குணசாலியான ஸ்தீரீயை கண்டுபிடிப்பவன் யார்? அவளுடைய விலை முத்துக்களை பார்க்கிலும் உயர்ந்தது. (நீதி-31:10)

குணசாலியான ஸ்தீரீ இவள்தான். ஒவ்வொரு இள வாலிபனின் கனவு எந்தவொரு திட்டமும் தீட்டி அவன் அப்படிப்பட்ட பெண்ணை பெற முடியாது. ஆனால் அவன் தன் தேவனிடம் தன் கனவுகளையும் தன் எதிர்ப்பார்ப்புகளையும் ஒப்புக்கொடுத்து அவருடைய நேரத்திற்காக காத்திருப்பானானால் நிச்சயமாக தேவன் அப்படிப்பட்ட பெண்ணை அவனுக்கு கொடுக்க வல்லமையுள்ளவராகவே இருக்கிறார். ஏவாளை ஏற்ற துணையாக ஆதாமுக்கு உருவாக்கி அவளை அவனிடத்தில் கொண்டு வந்த தேவனல்லவா அவர்.

அப்படிப்பட்ட மனைவியை பெற்ற மனிதன் முதலாவது அறிந்து கொள்ள வேண்டும் அவளுடைய விலை முத்துக்களை பார்க்கிலும் உயர்ந்தது என்று. பெண்ணின் அழகு, வேலை, படிப்பு, கலர், குடும்ப செல்வாக்கு, சொத்துக்கள் இவைதான் ஒரு பெண்ணை திருமணம் செய்ய உலகம் முதலாவது பார்க்கிறது. இவைகள் ஓரளவு முக்கியம் என்றாலும் தேவ பக்தியுள்ள பெண் இவைகள் எல்லாவற்றிலும் மேலானவள் அப்படிப்பட்ட பெண்ணை வாஞ்சிக்கும் போது நிச்சயமாக தேவ கிருபையும், ஆசீர்வாதமும் அங்கு இருக்கும். அவை உலகத்தின் எல்லா சம்பத்துக்களை விட மிகவும் உயர்ந்தது. குணசாலியான பெண்ணின் விலை இந்த உலகத்தில் எல்லா செல்வத்திற்கும் மேலானது.

வேதத்தில் அப்படிப்பட்ட குணசாலியான ஸ்திரீ ஒருவள் இருந்தாள். அவள் தான் ரூத் இப்போதும் மகளே, நீ பயப்படாதே உனக்கு வேண்டியபடியெல்லாம் செய்வேன் நீ குணசாலி என்பதை என் ஜனமாகிய ஊரெல்லாம் அறிவார்கள். (ரூத்-3:11) அவள் குணசாலியானவள் என்று ஊரெல்லாம் அறிந்திருந்தார்கள். அது எப்படிப்பட்ட ஆசீர்வாதம் ஆகையால் அவள் புறஜாதியான மோவாபிய ஸ்திரீயாயிருந்தாலும் கிறிஸ்து அவளுடைய சந்ததியில் பிறந்தார்.

# குணசாலியான ஸ்திரீ என்றால் என்ன?

அவளுடைய குணநலன்களை நீதிமொழிகள் 31-ம் அதிகாரத்தில் பார்க்கிறோம்.

குணசாலியான ஸ்திரீ தன் குடும்பத்தின் நன்மைக்காக பாடுபடுவாள். தன் கணவனின் காரியங்களிலும் வீட்டின காரியங்களிலும் கருத்துள்ளவளாயிருப்பாள்.

குணசாலியான ஸ்திரீ தான் செய்யும் வேலையை சந்தோஷமாய் உற்சாகத்தோடே செய்வாள்.

குணசாலியான ஸ்திரீ தன் வேலையில் கவனமாய் ஞானமாய் செய்வாள்.

குணசாலியான ஸ்திரீ தன் வாயை ஞானம் விளங்கத் திறக்கிறாள். தயையுள்ள போதகம் அவள் நாவின் மேல் இருக்கிறது.

குணசாலியான ஸ்திரீ கர்த்தருக்கு பயப்படுகிறவளாகி அவர் மேல் தன் நம்பிக்கையை வைக்கிறவளாக இருக்கிறாள்.

குணசாலியான ஸ்திரீ தன் உடையில் மிகவும் கவனமாயிருக்கிறாள்.

குணசாலியான ஸ்திரீ தன் கணவனை தவிர மற்ற ஆண்களிடம் மிக கவனமாக பழகுவாள்.

குணசாலியான ஸ்திரீ தம் குடும்பத்திற்கும் தன் பின்வரும் சந்ததிக்கும் எப்போதும் ஆசீர்வாதமாக இருப்பாள்.

ரூத்திற்கு இத்தனை குணநலன்களும் இருந்தபடியால் தான் அவள் குணசாலி என்ற பெயர் பெற்றாள். இந்த குணநலன்கள் இருந்தபடியால் அதை கவனித்து போவாஸ் அவளை மனந்து கொண்டார். இந்த காலத்து பெண்கள் இந்த குணநலன்களை உடையவர்களாகி இருக்கும்படியாக நாம் ஜெபிக்க வேண்டும். கணவனும் பிள்ளைகளும் உற்றார்உறவினரும் ஊராரும் பாராட்டும் குணசாலியான பெண்ணாக ஒவ்வொரு கிறிஸ்தவ பெண்ணும் இருக்க பிரயாசப்பட வேண்டும். தேவன் தாமே இந்த வார்த்தையை ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவுக்குள்
உங்கள் அன்பு சகோதரி,
**டெய்சி எபிநேசர்.**

# Kids Corner




SIFHSHIKA SAM







AARON



I WILL MAKE YOU FISHERS OF MEN

MATTHEW 4:1



O lord, thou art my God.

Isaiah 25:1

KAVIN ANTONY




# Jesus Is My Savior

God is Just and the Justifier;
Whenever He is with me, I face no failure.
Even though I walk through the darkest valley, I will fear no evil for you are with me;
The Lord is my Shepherd, I lack nothing.
I love the Lord, for He heard my voice;
As I follow every path of His given wise choice.
When I am afraid, I put my trust and faith in you.
So that in the name of Jesus the evil fades away and never will it not grow neither grew.
The Lord is God and He had made his light shine on us.
The Lord of hosts is with us; the God of Jacob is our fortress.
The Lord is good to me - Jesus is my Savior;
Rest in the Lord and wait patiently for Him for He is your Savior.

Kaviya Kannan
IX

## DISCIPLES OF JESUS




**ACROSS**

a) He betrayed Jesus (Mat 26:14)
g) Brother of Simon Peter (Mat 4: 18)
h) Son of zebedee
j) The zealot
k) He was a Tax collector (Mat 9:9)

**RIGHT TO LEFT**

d) He walked on water (Mat 14: 28)

**DOWN**

a) Son of Alphaeus
b) Explained to Nathanael about Jesus(John 1: 46)
c) He is also called as Didymus (John 11: 16)
f) The disciple whose name starts with 'B'
i) Brother of James

**BOTTOM TO TOP**

e) Son of James

HANSHIKA SAM

Answers will be next month.

# கடந்த மாத நிகழ்வுகள் தங்கள் பார்வைக்கு சில




















ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்
செயற்குழு உறுப்பினர்கள்
முதன்மை ஊழியர்
சகோ. S.ஸ்டாலின்
66021071 - 96760452
செயலாளர்
சகோ. S. சுகுமார்
99837646
பொருளாளர்
சகோ. S. சிவ குமார்
97224276
பெண்கள் ஐக்கிய தலைவி
சகோதரி . செலின் டேவிட்
65967170 - 99368775
வாலிப ஐக்கிய தலைவர்
சகோ. சுபின் சிங்
65197164-65772762
Church Website Address - ahmaditamilchurch.com
Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com
Church Postel Address
Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait
தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.
Private Circulation only